***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 266/2025 – P.W. 1 (LW-1.***

| | |
|---|---|
| *Name* | கலையரசன் |
| *Father/Husband's Name* | ஜெயராமன் |
| *Village* | பைங்காநாடு |
| *Age* | *36* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.11.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி பிரபா எனது மனைவி ஆவார். சாட்சிகள் வீரமணி, வேல்முருகன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் விவசாயம் செய்வதற்காக எனது வயலுக்கு வந்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது எனது பக்கத்து வயல்காரர் ஆவார்.

கடந்த 11.06.2025-ம் தேதி காலை 7 மணியளவில் நானும் எனது மனைவியும், எங்களுக்கு சொந்தமான பைங்காநாடு மாரியம்மன்கோவில் பின்புறமுள்ள சுண்ணாம்புதிடலிலுள்ள விவசாய நிலத்திற்கு மாடு ஓட்டி கொண்டு, எங்கள் இருதரப்பினர்களுக்கும் சொந்தமான பொதுவான வரப்பில் மாடை ஓட்டிக்கொண்டு சென்றுக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி ஓடி வந்து மாட்டை இந்த பாதையில் அழைத்துச்செல்லக்கூடாது என்று குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்று திட்டி, ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த மண்வெட்டி கழியால் எனது இடதுபக்க கண்ணில் குத்தி விட்டார். அதில் எனது கண் வீங்கிவிட்டது. வீரமணி என்பவர் என் நிலத்திற்கு ஏர் உழுவதற்காக வந்திருந்தார். ஆஜர் எதிரி என்னை தாக்கியவுடன் வீரமணி மற்றும் வேலமுருகன் ஆகியோர்கள் வந்து தடுத்தார்கள்.காயம்பட்ட என்னை எனது மனைவி மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் மேற்படி மருத்துவமனையில் 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். நான் உள்நோயாளியாக

மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து எழுதிக்கொண்டு அதில் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள்.

2.நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் வீரமணி, வேல்முருகன் ஆகியோர்கள் எதிரியை சமாதானம் செய்தபோது என்று கேட்டுக்கொண்டிருந்த போதே சாட்சி தானாக ஆஜர் எதிரி என்னை எப்படியிருந்தாலும், என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மண்வெட்டியை காட்டி மிரட்டினார் என்று கூறுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பட்டியல் சாட்சி 2 எனது மனைவி என்று சொன்னால் சரிதான். பட்டியல் சாட்சி 3 வீரமணி நடந்நததாக சொல்லப்படும் சம்பவதன்று என்னிடம் வேலை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். பட்டியல் 3 வீரமணி பட்டியல் சாட்சி 4 வேல்முருகன் இருவரும் எனக்கு ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். பைங்காநாட்டிலிருந்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் வருவதற்கு சுமார் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1/2 நேரமாகும்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நானும் என் மனைவியும் இருசக்கர வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு வந்தோம். என் மனைவி வாகனத்தை ஓட்டினார். நான் பின்னால் உட்கார்ந்திருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் தான் எதிரிக்கும் வயல் உள்ளது என்றால் சரிதான். எனக்கு கீழ்புறத்திலும், எதிரிக்கு மேல்புறத்திலும் வயல் உள்ளது. இரண்டு வயல்களுக்கும் ஒரே வரப்பு தான் உள்ளது என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எதிரி அவரது வயலில் இருந்தபோது தான் நான் என் வயலுக்கு சென்றேன் என்றால் சரிதான். அன்றையதினம் எனது வயலிலும், எதிரி வயலிலும், கதிர்விட்டு அறுவடைக்கு தயாராக இருந்தது. அப்போது தான் நான் ஒரு மாட்டையும், என் மனைவி ஒரு மாட்டையும் அழைத்துச் சென்றேன் என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நானும் என் மனைவியும் மாடுகளை அவரது வயலில் விட்டு ஓட்டினோம் என்றால் சரியல்ல. அவ்வாறு அழைத்து செல்லும் எதிரியின் வயலிலுள்ள கதிர்களை நான் ஓட்டி சென்ற மாடுகள் மிதித்தும், சாப்பிட்டும், சேதப்படுத்தின என்றால் சரியல்ல.

4. சம்பவ நாளில் எதிரி தாக்கியதாக சொல்லப்படும் மண்வெட்டி என்ன கம்பெனி என்றால் டாடா கம்பெனியாகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் முதல் விசாரணையில் சொன்ன காயங்களை தவிர வேறு காயங்கள் இல்லை என்றால் நெஞ்சில் ஒரு கீறழ் காயம் இருந்தது. அந்த காயத்தை போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். நானும், எதிரியும் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தபோதுதான் அங்கு பட்டியல் சாட்சி 4 வேல்முருகன் வந்தார் என்றால் சரிதான். வேல்முருகன் வந்து தான் எனக்கும் எதிரிக்கும் இடையே நடந்த சண்டையை விலக்கிவிட்டார். நான் மருத்துவமனைக்கு வந்தபோது நான் மயக்கநிலையில் இருந்தேன். அதனால் என் மனைவி தான் மருத்துவரிடம் விவரம் சொன்னார். மறுநாள் தான் எனக்கு மயக்கம் தெளிந்தது.

5. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள்ள ன்றால் சம்பவம் நடந்த அன்றையதினம் மதியம் 3 மணிக்கு விசாரித்தார். போலீசாரிடம் என் மனைவி தான் விவரங்களை சொன்னார். என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். சம்பவம் நடந்தாக சொல்லடும் நாளில் நான் மாடுகளை அழைத்துச்சென்று அவரது வயலை சேதப்படுத்தியதால் அதுக்குறித்து கேட்ட எதிரியை நான் தாக்க முற்பட்டபோது நான் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டதென்றால் சரியல்ல.

6. எனது தவறை மறைக்கவும், எதிரி என் மீது வழக்கு கொடுத்துவிடுவார் என்பதற்காகவும், எதிரி என் மீது கொடுக்கும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும், கீழே விழுந்து அதன் மூலம் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரியை தொடர்புபடுத்தி

பொய்யான புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 10.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT*
## *Mannargudi*
## *CC.No. 266/2025 – P.W. 2 (LW-2)*

| | |
|---|---|
| *Name* | பிரபா |
| *Father/Husband's Name* | கலையரசன் |
| *Village* | பைங்காநாடு |
| *Age* | *36* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.11.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 கலையரசன் என் கணவர் ஆவார். சாட்சிகள் வீரமணி, வேல்முருகன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்கார்கள் ஆவார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது எனது பக்கத்து வயல்காரர் ஆவார்.

2. கடந்த 11.06.2025-ம் தேதி காலை 7 மணியளவில் நானும் எனது கணவரும் எங்களுக்கு சொந்தமான பைங்காநாடு மாரியம்மன்கோவில் பின்புறமுள்ள சுண்ணாம்புதிடலிலுள்ள விவசாய நிலத்திற்கு மாடு ஓட்டி கொண்டு, எங்கள் இருதரப்பினர்களுக்கும் சொந்தமான பொதுவான வரப்பில் மாடை ஓட்டிக்கொண்டு சென்றுக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி ஓடி வந்து மாட்டை இந்த பாதையில் அழைத்துச்செல்லக்கூடாது என்று மறைத்தார். ஆஜர் எதிரி கையில் மண்வெட்டியை வைத்துக்கொண்டு, எங்களை குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்று திட்டி, எங்களை பார்த்து வெட்டிவிடுவேன் என்று கூறிக்கொண்டே எனது கணவரின் சட்டை கிழித்து ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த மண்வெட்டியால் என் கணவரின் இடது கண்ணில் குத்தியதில் என் கணவரின் கண் வீங்கி முடிவிட்டது. பின்னர் இருவரும் வயலில் மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது எங்கள் வயலுக்கு எங்களுடன் ஏர் ஓட்ட வந்த வீரமணி மற்றும் ரோட்டில் வந்த வேல்முருகன் ஆகியோர்கள் ஆஜர் எதிரியை சத்தம்போட்டு அனுப்பி வைத்தார்கள். எனது கணவரை தாக்கும்போது நான் தடுக்க முயற்சித்தபோது

என்னையும் மேற்சொன்ன அதே கெட்ட வார்த்தையால் திட்டினார். காயம்பட்ட என் கணவரை நான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். மேற்படி மருத்துவமனையில் என் கணவர் சுமார் 10 முதல் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார். நாங்கள் மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் வீரமணி, வேல்முருகன் ஆகியோர்கள் எதிரியை சமாதானம் செய்தபோது ஆஜர் எதிரி எனது கணவரை கொல்லாமல் விடமாட்டேன் என்று மண்வெட்டியை காட்டி மிரட்டினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 15 நாட்கள் என் கணவர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார் என்ற விவரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியும், அ.சா.1 ஆன எனது கணவரும் எங்களது வயலில் தான் மல்லுக்கட்டி கொண்டிருந்தார்கள் அந்த விவரத்தையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.எங்களது வயல் மேட்டிலும், எதிரியின் வயல் பள்ளத்திலும் உள்ளது என்றால் சரிதான். மல்லுக்கட்டிக்கொண்டிருந்தபோது மேட்டுப்பகுதியிலிருந்து பள்ளத்தில் விழுந்து விட்டார்கள். அப்போது தான் ரோட்டில் சென்றுக்கொண்டிருந்த பட்டியல் சாட்சி 4 வேல்முருகன் வந்து தடுத்தார் என்றால் சரிதான். எதிரி என்னை தகாத வார்த்தையில் திட்டினார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்தபிறகு எவ்வளவு நேரத்தில் மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் சுமார் 1/2 மணி நேரத்திலிருந்து 1 மணி நேரத்திற்குள்ளாக சென்றுவிட்டேன். சம்பவம் நடந்த நாளில் நாங்கள் அழைத்து சென்ற மாடு எதிரியின் வயலில் இறங்கி சேதப்படுத்தியது

என்றால் சரியல்ல. அதுக்குறித்து எதிரி கேட்டபோதுதான் என் கணவரை அவரை அடிக்க சென்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு என் கணவர் எதிரியை தாக்க சென்றபோது கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 10.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.